(முற்பகல் 10-00)

இந்த விதிமுறைகள் இருப்பதால் அவர்களுக்குக் கடன் வழங்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, இந்த விதிமுறைகளை மாற்றியமைத்து அவர்களுக்குக் கடன் வழங்குவதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது போன்ற மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயற்படும் திட்டங்களுக்குக் கொடுக்கப்படும் நிதியுதவியைப் பெறும்பொழுது கால தாமதம் ஏற்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் கூறினார்கள். அப்பொழுது ஏற்படுகின்ற காலதாமதத்திற்கு ஒரு சில காரணங்கள் இருக்கின்றன. அதாவது, லாம்ப் கூட்டுறவு சங்கத்தில் கடன் இல்லை என்ற அத்தாட்சி பெற வேண்டும். ஜாமீன் தாரருக்கு எந்தக் கடனும் இருக்கக் கூடாது ; ஒரு நபர், ஒரு கடன் பெறுபவருக்கு மேல் ஜாமீன்தாரராக இருக்கக் கூடாது ; விண்ணப்பதாரர் குடும்பத்தில் யாருக்காவது வங்கியில் கடன் இருந்தால் இவருக்குக் கடன் கிடையாது ; கடன் பெறுவோர் ஒருவருக்கொருவர் ஜாமீன்தாரராக இருக்கக் கூடாது ; வங்கியின் அருகாமையில் இருப்பவர்களும், வங்கிக்கு அறிமுகமானவர்களும் ஜாமீன்தாரர்களாக இருக்க வேண்டும் ; மேற்குறிப்பிட்டுள்ள ஆவணங்களை நிதியுதவி பெறும் நபர்கள் கொடுப்பதில் தாமதம் ஏற்படுகிறது. ஆவணங்கள் பெறப்பட்டவுடன் நிதியுதவி வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடன்குடி பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனம்

304—(*வினா எண். 21811)—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தொகுதி, உடன்குடி பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம் லாபத்தில் இயங்குகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1984 மார்ச் 13]

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : (அ) உடன்குடியில் திருநெல்வேலி மாவட்ட பனை வெல்ல கூட்டுறவு சம்மேளனத்தின் கிளை நிலையம் ஒன்று உள்ளது இக்கிளை தற்போது இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

(ஆ) கடந்த நான்காண்டுகளில் இக்கிளை ஈட்டிய இலாப நட்ட விவரம் பின்வருமாறு :—

ஆண்டு.	இலாபம்.	நட்டம்.
(1)	(2)	(3)
	ரூ.	ரூ.
1979—80	4,743.21	..
1980—81	35,718.70	..
1981—82	..	32,230.17
1982—83	8,508.83	..
1983—84	18,815.35	..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. கவன ஈர்ப்புகள்

(அ) நெய்வேலி இரண்டாவது மின் நிலைய கட்டுமானப்பணித் தொழிலாளர்கள் விபத்துக்குள்ளாகி இருப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ரா. உமாநாத், கு. ரமணி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், கே. ஆர். சுந்தரம், தி. கா. நல்லப்பன், மு. அப்பாத்துரை, என். ஏ. பூங்காவனம், செ. சிவசாமி, ஏ.டி. கருப்பையா ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

சட்டமன்ற பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS